# பொதுக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு C

### இன்றைய வாசகங்கள்:

இறைவாக்கினர் நெகேமியா நூலிலிருந்து வாசகம். 8:2-4, 5-6, 8-10,

பல்லவி: ஆண்டவரே உம் வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன.,

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய

முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 12: 12-30,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 1:1-4, 4:14-21

### திருப்பலி முன்னுரை:

நற்செய்திக்குரியவர்களே,

பொதுக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். ஆண்டவரின் வார்த்தைகளை ஏற்று அவரில் ஒன்றித்திருக்க இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்து இயேசு பாவத்தின் அடிமைத்தளையால் ஒடுக்கப்பட்ட நம்மை விடுவிக்கவும், கடவுளின் திட்டம் பற்றிய சரியான பார்வையை நமக்கு வழங்கவும் இவ்வுலகிற்கு வந்தார் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. மறைநூல் வாக்குகளை நிறைவேற்றிய இறைமகன் இயேசுவே நமது மீட்பர் என்று உறுதியாக நம்பி ஏற்றுக்கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம். மறைநூலில் முழுமையான நம்பிக்கை கொண்டவர்களாக, ஒரே உடலின் உறுப்புகளாக கிறிஸ்துவில் இணைந்து வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**ஞானத்தின் தொடக்கமாம் இறைவா,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், தூய ஆவியின் ஆற்றலைப் பெற்றவர்களாய், திருச்சபையின் மக்களையும், உலக நாடுகளின் தலைவர்களையும் நிறை உண்மையின் பாதையில் வழிநடத்த உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**மகிழ்ச்சியின் ஊற்றே இறைவா,**

உலக மக்கள் அனைவரும் இறைவார்த்தையைக் கேட்டு மனம் வருந்தவும், உம்மைப் பற்றிய உண்மைகளைப் புரிந்துகொண்டு மீட்பின் மகிழ்ச்சியை அனுபவிக்கவும் தேவையான உதவிகளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**உண்மையின் நற்செய்தியே இறைவா,**

உலக வரலாற்றில் உம் திருமகன் வழியாக நீர் நிறைவேற்றிய மீட்புத் திட்டத்தை எம் நாட்டு மக்கள் அனைவரும் புரிந்துகொள்ளவும், உமக்கு உரியவர்களாய் வாழத் தூண்டுதல் பெறவும் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**விடுதலையின் நிறைவே இறைவா,**

பலவிதமான உடல், உள்ள, ஆன்ம நோய்களால் வருந்தும் மக்களை கனிவுடன் கண்ணோக்கி, அவர்களுக்குத் தேவையான நற்சுகமும், புதுவாழ்வும் அளித்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**முன்னும் பின்னும் எங்களைச் சூழ்ந்திருக்கும் எம் அன்பு இறைவா!**

இந்த நல்ல நாட்களில் பொங்கல் விழாவைக் கொண்டாடி மகிழ்ந்த எம் உழைக்கும் மக்களின் வாழ்வில் விவசாயம் பெருகவும், அதன் மூலம் ஏழை எளியோர்கள் பொருளாதாரம் பல்கிப்பெறுகிடவும், அவர்தம் பிள்ளைகள் கல்விச்செல்வங்கள் நிறைவாகப் பெற்றிடவும், இயேசுவின் வருகையால் மாற்றங்கள் பெற்றிடவும் இறைவா அருள் வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**எமக்கு மன்னிப்பு அளித்து எமக்கு புதுவாழ்வை வாக்களித்த தந்தையே இறைவா!**

எம் இளைய சமுதாயம் தனது வாலிப நாட்களில் நீர் தரும் நலன்களை கண்டுக் கொண்டு அதனை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள தூயஆவியானவரின் அருங்கொடைகளை அபரிமிதமாகப் பொழிந்தருளவேண்டும் என்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.